
புதுமலர்: 22 இதழ்: 03 வைகாசி - ஆனி



அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்:
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -

# அனல்

01.05.2025

ஆசிரியர்:
போதகர் வே.மகாராஜா

## கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையும் நன்மையுமாய் இருக்கிறதைச் செய்வாயாக.

சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

01. அனலின் குரல்
02. கதையும் கற்றதும்
03. நற்செய்திப்பகுதி
04. சிறுவர் வட்டம்
05. குறுக்கெழுத்துப்போட்டி - 125
06. வாலிபர் வளாகம்
07. பெண்கள் பக்கம்
08. வினா விடை - 127
09. அருட்பணியாளர் சரிதை
10. அனலின் ஆன்மீக விருந்து
11. பக்தர்கள் பயிலகம்
12. படித்ததில் சில...
13. கிரிக்கெட் மட்டை ஏன் கிடைக்கவில்லை
14. தேவன் தந்த வைரங்கள்

# ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

**எழுத வேண்டிய முகவரி:**

சீயோன் ஜெபக்குழு,
இல 29, 29/1,
இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

ஆசிரியர் "அனல்",
இல 29, 29/1, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

The Editor "Anel",
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk

திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக – எரேமியா 49:11 –

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அனலின் குரல்

இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இம்மட்டும் பாதுகாத்து வழிநடத்திய கர்த்தர் தொடர்ந்தும் உங்களை நடத்துவாராக.

நம் தேவன் எம்மீது வைத்துள்ள அன்பு எவ்வளவு பெரியது என்பதை; "அவருடைய குமாரனாகிய கிறிஸ்துவை கொடூர மரணத்திற்கு ஒப்புக்கொடுத்து மனிதர்களுக்கு கொண்டு வந்த மீட்பைப் பார்க்கும் போது" நாம் புரிந்து கொள்ள முடியும்.

அவரை விசுவாசிக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் இரட்சிப்பையும் நித்திய ஜீவனையும் அவர் கொடுக்கின்றார்.

அருமையானவர்களே, சங்கீதக்காரன் சொல்கிறார்: "நான் மரண இருளின் பள்ளத் தாக்கில் நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப் படேன், தேவரீர் என்னோடு கூட இருக்கிறீர்"

ஆம்! எப்போதும் இயேசுவை நம்புங்கள். தொடர்ந்தும் வரப்போகும் நாட்கள் எல்லாம் கர்த்தர் உங்களுடன் இருந்து ஆசீர்வதிப்பாராக.

- ஆசிரியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதையும் கற்றதும்

## அவன் கனமாக இல்லை... அவன் என் சகோதரன்!

வை. விமலதாஸ்



இரண்டாம் உலக யுத்தம் நடந்து கொண்டு இருந்தபோது ஆகஸ்டு 9, 1945 ஆம் ஆண்டு அமெரிக்கா ஜப்பான் நாட்டின் நாகசாகி மீது அணுகுண்டு வீசியது. இதில் ஒரே நாளில் பல்லாயிரம் மக்கள் கொல்லப் பட்டார்கள்.

ஜோ ஓடோனல் என்பவர் ஒரு அமெரிக்க புகைப்பட பத்திரிகையாளர். நாகசாகி மற்றும் ஹிரோஷிமாவில் அணு குண்டு வெடிப்புகளுக்குப் பிறகு உடனடியாக புகைப்படங்களை பதிவு செய்ததற்காக அவர் மிகவும் பிரபலமானவர். அமெரிக்க தகவல் நிறுவனத்தால் அவர் அனுப்பப்பட்டார். அவர் செப்டம்பர் 1945 ஜப்பானுக்கு வந்தார். அவர் முதியவர்கள், இறந்தவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்கள், வீடற்றவர்கள் மற்றும் அனாதைகளை புகைப்படம் எடுத்தார். அவரால் எடுக்கப்பட்ட மிகவும் பிரபலமான படம் இங்கே காணப்படும் லிட்கே சிறுவன் மற்றும் அவரது சகோதரரின் படம்.

இந்த புகைப்படமானது அணுகுண்டு வீசப்பட்ட சிறிது நாட்களுக்கு பிற்பாடு செப்டம்பர் மாதம் 1945இல் எடுக்கப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க புகைப்படமாகும். குண்டுவீச்சில் தப்பி பிழைத்த 10 வயதான சிறுவன், குண்டு வீச்சில் தனது பெற்றோர்களையும் உறவினர்களையும் இழந்துபோன நிலையிலும் கட்டிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடிபாட்டில் மரித்துப்போன இரண்டு வயது நிரம்பிய தனது தம்பியை தன்னுடைய முதுகில் கட்டிவைத்துக்கொண்டு, மரித்தவர்களை தகனம் செய்யும் சுடுகாட்டில் தகனம் செய்ய தன்னுடைய முறைக்காக காத்திருக்கிறான்.

அப்போது அவனை கவனித்த ஒரு இராணுவவீரர் இறந்துபோன குழந்தையை அவன் முதுகில் கட்டிவைத்திருப்பதில் சோர்வடைந்து போகாமல் இருக்கும்படி அதனை கீழே இறக்கி வைக்க கேட்டுக் கொண்டான்.

அப்போது பதில் கொடுத்த அச்சிறுவன்: **"அவன் கனமாக இல்லை... அவன் என் சகோதரன்"** என்றான்.

இந்த சிறுவன் கூறியதை அந்த இராணுவ வீரர் தெளிவாக புரிந்து கொண்டார்.

அப்போதிருந்து, இந்த புகைப்படமானது ஜப்பான் நாட்டில் சகோதர உறவின் அடையாளமாக மாறியது.

ஆம் நண்பர்களே, இதுவே நமது வாழ்விலும் பொன்மொழியாக இருக்கட்டும்: **"அவன் கனமாக இல்லை... அவன் என் சகோதரன்... அவள் என் சகோதரி"**.

உங்கள் சகோதரன் அல்லது சகோதரி எப்படிப்பட்ட நிலையில் இருந்தாலும் அவர்களை கைதூக்கி எழுப்பிவிடுங்கள். நீங்கள் சோர்வடைந்து இருந்தாலும், அவர்களுக்கு உதவுங்கள். அவர்கள் உங்களை மனமொடிய பேசியிருந்தாலும் அல்லது தீமை செய்திருந்தாலும், அவர்களை மன்னியுங்கள். ஏனென்றால் "அவர்கள் கனமாக இல்லை... அவர்கள் உங்கள் சகோதரர், சகோதரி..." இந்த உலகம் அவர்களை கைவிட்டாலும், அவர்களை உங்கள் முதுகில் சுமந்து கொள்ளுங்கள்.... ஏனென்றால் **"அவர்கள் கனமாக இல்லை.... அவர்கள் உங்கள் சகோதரர், சகோதரி..."**

**1யோவான் 4:20 தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மேலே பாருங்கள்

பர்னபா




கிறிஸ்துவுக்குள் அன்பின் நற்செய்தி வாசகர்களுக்கு இனிய வாழ்த்துக்கள். மறுபடியும் அனலின் நற்செய்தி பகுதியினூடாக உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**சங்கீதம் 121:1-3 (1.) எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக (மேலாக) என் கண்களை ஏறெடுக்கிறேன். 2. வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்தி லிருந்து எனக்கு ஒத்தாசை வரும். 3. உன் காலைத் தள்ளாடவொட்டார்; உன்னைக் காக்கிறவர் உறங்கார்.**

பரிசுத்த வேத வசனத்தில் புறஜாதியாருடைய விக்கிரக வழிபாடுகளைப் பற்றி நாம் அதிகமாக வாசிக்கலாம். அவர்களுடைய விக்கிரக வழிபாடுகள், நம்பிக்கைகள் எல்லாம் மலைகளை மையமாக வைத்தேயிருக்கும்.

அவர்கள் மலைகளில் பிள்ளைகளை, மிருகங்களை பலியிடுவார்கள் கூடவே தீ கடக்கப்பண்ணுவார்கள். எல்லா மலைகளையும் விக்கிரகங்களால் நிரப்பி தங்கள் பார்வையை அந்த மலையை நோக்கியே ஏறெடுப்பார்கள். இதற்கு அவர்கள் மெய்யான தேவனை அறியாமலிருப்பதே காரணம்.

கிறிஸ்துவை அறிந்த மக்களாகிய நாம் விக்கிரகங்களை வழிபடமாட்டோம். ஆனாலும் சில மலைகள் மேலே எம் நம்பிக்கை மறைவாக உள்ளது. சிலர் மனிதர் தங்களுடைய கல்வியை தங்கள் மலையாக கருதுவார்கள். நான் படித்த படிப்பு என்னைப் பிழைப் பூட்டும். படித்ததினாலேயே எப்படியோ பிழைத்துக் கொள்வேன் என தங்களுடைய அறிவை, தகுதியை, ஸ்தானங்களை நம்புவார்கள்.

சிலர் தங்களுடைய தொழிலை மேன்மையாக நினைத்து எனக்கு சுயமான தொழில் உண்டு. நல்ல நிலையில் இருக்கிறேன். மிகுந்த வருமானம் பெறும்படி அஸ்திபாரம் போட்டிருக்கிறேன் என தங்களுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலை மேன்மை பாராட்டிக் கொள் வார்கள்.

இன்னும் சிலர் தங்களுடைய குடும்ப அந்தஸ்து, செல்வாக்கு, இன்னும் வெளிநாடுகளில் இருக்கும் தங்களுடைய உறவுகளை ஒரு மலை அல்லது பர்வதமாக நோக்குவார்கள். எல்லா முடிவுகளையும் பணம் சம்பந்த மான சகல தீர்மானங்களையும் வெளி நாடுகளில் இருக்கும் சில பர்வதங் களை நம்பியே அல்லது அவர்களை மையமாக வைத்தே எல்லாவற்றையும் செய்வார்கள்.

**கிறிஸ்துவுக்குள் பிரியமான வர்களே, எங்களுடைய ஒத்தாசை எங்களுடைய கல்வியல்ல. எங்களு டைய சொந்த தொழில்களல்ல, வெளி நாடுகளில் இருக்கும் எம் உறவு களுமல்ல. மாறாக எம் நம்பிக்கை பர்வதங்களுக்கு மேலாக இருக்கும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவே.**

**சங்கீதம் 123:1 பரலோகத்தில் வாசமாயிருக்கிறவரே, உம்மிடத்திற்கு என் கண்களை ஏறெடுக்கிறேன்.**

ஆம் நாம் பர்வதங்களுக்கு மேலாக பரலோகத்தில் வாசமாயிருப்ப வரை நோக்கியே எம் கண்களை ஏறெ டுக்க வேண்டும்.

நாம் நம்பும் பர்வதங்களில் இருந்து ஒத்தாசை வராது. மாறாக

**சங்கீதம் 121:2 வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத் திலிருந்து எனக்கு ஒத்தாசை வரும்.**

ஒருவேளை இப் பகுதியை வாசிக்கும் சகோதரனே நீங்கள் இயேசு கிறிஸ்துவை அறியாதவராக இருக்க லாம். இதுவரை நீங்கள் இயற்கையின் மேல் உங்கள் நம்பிக்கையை வைத்து அவைகள் தான் எனக்கு ஒத்தாசை யாக இருக்கும் என நினைத்திருக் கலாம். இல்லை நண்பனே! இயற் கைக்கும் அப்பாற்பட்ட ஒருவர் உங் களுக்கு உதவி செய்ய ஆயத்தமாக இருக்கிறார். அவர் தான் ஆண்டவ ராகிய இயேசு கிறிஸ்து!

உங்களுடைய இருதயத்தை அவருக்கு கொடுங்கள். இயேசுவே நான் உம்மை பார்க்கிறேன், நீர் என் உள்ளத்திற்குள் வாரும் என்று கூப் பிடுங்கள். அவர் உங்கள் உள்ளத் திற்குள் வருவார். உங்கள் பாவத்தி லிருந்து விடுதலை தருவார்.

சில கொடிய வியாதிகளி னாலே நீண்ட காலமாக நீங்கள் வேதனையை அனுபவித்துக் கொண்டி ருக்கிறீர்களா? உங்கள் பார்வைக்கு பர்வதமாக, மலையாக தோன்றிய வைத்தியத்தை, பரிகாரியை உங்கள் கண்கள் ஏறெடுத்து தோற்றுப்போய் விட்டதா? பதில் ஒன்றுமே காணோம். வேதனை அல்லது இருக்கும் நிலைமை இன்னும் அதிகரித்துக் கொண்டே தான் போகின்றது. ஒன்றும் குறைந்த பாடில்லை என அங்கலாய்க்கிறீர் களா?

**அன்பான நண்பனே நீங் கள் பர்வதங்களுக்கு மேலாக இருக் கும் இயேசுவை நோக்கி உங்கள் கண்களை ஏறெடுப்பீர்களா?**

நீங்கள் கண்களை ஏறெடுக் கும் தேவன் எப்படிப்பட்டவர் தெரியுமா?

**“உன் காலைத் தள்ளாட வொட்டார்”**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் அவர் உங்களை தள்ளாட விடவேமாட்டார். நீங்கள் நம்பும் மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலை பெயர்ந்தாலும் ஆண்டவராகிய இயேசு உங்களைத் தள்ளாடவிடவே மாட்டார்.

நீங்கள் நம்பும் மனிதர்கள் உங்கள் கால்களை இடறச்செய்து விடுவார்கள். தள்ளாடப்பண்ணுவார் கள். தடுமாற வைப்பார்கள். காலை நிலை குலையச் செய்து எம்மை விழச் செய்துவிடுவார்கள்.

ஆனால் நீங்கள் நம்பும் பர்வ தங்களுக்கு மேலாக இருக்கும் ஆண்ட வர் இயேசு உங்கள் கால்களைத் தள்ளாடவொட்டார். உங்கள் அடிகளை உறுதிப்படுத்தி உங்கள் பாதைகளில் நீங்கள் பெலத்தோடு நடக்கும்படி அனுக்கிரகம் செய்வார்.

அன்பான தாயே, நீங்கள் உங்கள் பிள்ளைகளைக் குறித்து கவலைப்படுவது, வேதனையோடு இருப்பது உண்மை. ஆனாலும் உங்கள் பிள்ளைகளுடைய எதிர் காலத்தைக் குறித்த நம்பிக்கையை எங்கே வைத்திருக்கிறீர்கள்? அறியா மல் எதை சார்ந்து கொள்கின்றீர்கள்?

தாவீது சொன்னார்: 'நான் நம்புவது அவராலே வரும்' என்பதாக.

ஆம் பிரியமானவர்களே உங் களுக்கு நன்மையுண்டாகும்படி பர்வதங் களை நோக்காமல் அதற்கு அப்பா லிருக்கும் கர்த்தரை நோக்குவீர்களா!

ஆசா என்ற ராஜா தன் கடைசி நாட்களிலே வியாதி வந்த போது கர்த்தரையல்ல, அவன் பரிகாரி களையே தேடினான்.

**11நாளாகமம் 16:12 ஆசா அரசாண்ட முப்பத்தொன்பதாம் வருஷத் திலே தன் கால்களில் வியாதிகண்டு, அவன் நோவு மிகவும் உக்கிரமாயி ருந்தது; அவன் தன் வியாதியிலும் கர்த்தரை அல்ல, பரிகாரிகளையே தேடினான்.**

அகசியா என்ற ராஜா கிராதி யின் (ஜன்னல்) வழியாக விழுந்து வியாதிப்பட்ட போது தான் பிழைப் பேனோ என்பதை அறியும்படி இஸ்ரவே லின் தேவனையல்ல, எக்ரோனின் தேவனாகிய பாகால் சேபூலைத் தேடி னான். **11இராஜாக்கள் 1:2-4**

சவுல் ராஜா சுற்றி நெருக்கம் வந்த போது கர்த்தரைத் தேடாமல் கர்த்தரை தேடுகிறேன் என்ற போர்வை யில் சூனியக்காரியை, அஞ்ஞனம் பார்க்கிறவர்களைக் கேட்கும்படி தேடி னான். **1நாளாகமம் 10:13**

பிரியமானவர்களே நாம் எதை முக்கியத்துவப்படுத்துகின்றோம்? கர்த்தரையா? அல்லது எம் பார்வைக்கு பெரிதாக தோன்றும் பர்வதங் களையா? பர்வதங்களுக்கு மேலாக இருக்கும் கர்த்தரை எம் கண்கள் ஏறெடுக்கட்டும். அவர் நமக்கு ஒத்தாசை அனுப்பி எம் காலை உறுதிப்படுத்துவார்.

குதிரைகளையும் இரதங்களை யும் நம்புகிறவர்கள் இடறி விழுவார்கள். கர்த்தரை நம்புகிறவர்களே எப்போதும் நிமிர்ந்து நிற்பார்கள்.

கர்த்தரை நோக்கி கண்களை ஏறெடுப்போம். அவர் நம் கவலைகளை களிப்பாக மாற்றுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாவிடை 126
### சரியான பதில்கள்

01. எலிசா - 1இராஜாக்கள் 19:19
02. அன்னாள் - 1சாமுவேல் 1:11, 22-24
03. ஆபி - 11இராஜாக்கள் 18:1,2
04. நாகமாத்தியனாகிய சோப்பார் - யோபு 20:11
05. தேவனுடைய வீடு - ஆதியாகமம் 28:19
06. யாப்போக்கு - ஆதியாகமம் 32:22
07. தானியேல் - தானியேல் 10:4-11
08. மோசே - யாத்திராகமம் 18:24
09. எசேக்கியேல் 13:11
10. தாவீது - சங்கீதம் 109:18

# குறுக்கெழுத்துப் போட்டி - 124

## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. பெத்தேல் (ஆதியாகமம் 35:6)
08. சிபெக்காய் (1நாளாகமம் 20:4)
11. பார்வோன்நேகோ (11இராஜா 23:29)
12. பிலேயாம் (எண்ணாகமம் 24:3)

**வலமிருந்து இடமாக**

02. சல்மோன் (ரூத் 4:21)
04. யோனா (யோனா 4:9)
05. நெகேமியா (நெகேமியா 8:9)
06. சத்தம் (சங்கீதம் 29:7)
07. யோனத்தான் (11சாமுவேல் 21:21)
10. பிஸ்காவின் (உபாகமம் 3:27)
13. யோசேபாள் (11இராஜாக்கள் 11:2)

**மேலிருந்து கீழாக**

01. பெனாயா (1நாளாகமம் 11:22)
02. சன்பல்லாத் (நெகேமியா 4:1)
03. நிம்ரோத் (ஆதியாகமம் 10:9)

**கீழிருந்து மேலாக**

07. யோசதாக் (1நாளாகமம் 6:14-15)
09. செயல்தியேல் (எஸ்றா 3:2)
10. பிரயாசம் (நீதிமொழிகள் 10:16)
12. பினெகாசின் (1சாமுவேல் 4:21)

**சரியான விடை எழுதியவர்களில் பாராட்டுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:**




**வினாவிடை - 126**
க.அனுசியா
(ஆழியவளை)

**குறுக்கெழுத்துப் போட்டி - 124**
எஸ்.குகன் குடும்பம்
(கனடா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எழுந்து நட.....

ஜசிந்தா அக்கா




ஞாயிறு பாடசாலையில் ஆரம்ப வகுப்பு மாணவர்கள் மிகவும் கலகலப்பாக இருப்பார்கள். தங்களது ஆசிரியரோடு நெருங்கியிருந்து பழக விரும்பும் சுபாவ முடைய இவர்கள் ஆசிரியர் கற்றுக் கொடுப்பதை மிகவும் உற்றுக் கவனித்து செயற்படுத்துவார்கள். பாடத்திற்கான கை வேலைகள் செய்யும் போது தாங்களாகவே செய்வதினால் மிகுந்த மகிழ்ச்சி அடை வார்கள்.

ஒரு நாள் இரண்டு பேர் பிறவிச் சப்பாணியை சுமந்து கொண்டு தேவாலய வாசலில் வைத்ததையும் பிச்சை எடுக்கிற தையும் பேதுருவும் யோவானும் ஆலயத்தில் பிரவேசிக்கிற பொழுது அவர்களிடத்திலும் பிச்சை கேட்பதையும்; "எங்களை நோக்கிப்பார்" என்பதையும் "நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட" என்று சொல்லி அவனைத் தூக்கிவிட்டதையும் உடனே அவன் பெலன் கொண்டு குதித்தெழுந்து தேவனைத் துதித்துக் கொண்டு தேவாலயத்திற்குள் பிரவேசித்ததையும் ஒரு குறுநாடகம் மூலம் ஆசிரியை மிகவும் அழகாகக் கற்றுக் கொடுத்தார்.

மிகுந்த ஆர்வத்தோடும் ஆச்சரியத்தோடும் உற்றுக் கவனித்துக் கொண்டிருந்த பிள்ளைகள் இருதயத்தில் கருங்கல்லில் எழுதியது போல் பதிந்து விட்டது. வகுப்பு முடிந்தது. பிள்ளைகள் வீடு சென்றனர்.

அன்று மாலை நேரம் வகுப்பில் இருந்த ஒரு பிள்ளை தனது பெற்றோரோடு உறவினர் வீட்டிற்குச் சென்றிருந்தார். அங்கு தனது உறவு முறையான ஒருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாதிப்பட்டு படுக்கையில் இருப்பதைக் கவனித்தார். பெற்றோர் அவரிடத்தில் சுகம் விசாரித்த பின் வீட்டிற்குத் திரும்பினார்கள். ஆனால் அந்த சிறுவனோ வியாதிப்பட்டவரை ஒரு கணம் பார்த்துக் கொண்டே நின்றார். அவரை உற்றுப்பார்த்து "எழுந்து நட" என்று சொல்லி பின் தனது பெற்றோரோடு சேர்ந்து வீடு சென்றார்.

வியாதிப்பட்டவரோ படுக்கையை விட்டு எழுந்தார். தன்னைவிட்டு வியாதி நீங்கினதையும் உணர்ந்து வியப்போடு தேவனைத் துதித்தார்.

பிள்ளைகளே, நீங்களும் ஞாயிறு பாடசாலையில் படிக்கும் பொழுது ஆசிரியர் கற்பிப்பதை உற்றுக் கவனியுங்கள், அதன்படி செய்யுங்கள். இயேசப்பா உங்களையும் பயன்படுத்தி ஆச்சரியமான காரியங்களைச் செய்வார்.

**மத்தேயு 21:16b குழந்தைகளுடைய வாயினாலும், பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர்.**

---

# குறுக்கெழுத்துப் போட்டி - 124, வினா விடை - 126

## சரியான விடை எழுதியவர்கள்

**கனடா**
01. எஸ். குகன் குடும்பம் +

**காரைநகர்**
02. நா.அன்னாள்
03. அ.தெபோரா
04. உ.கிறேசிகன்
05. கி.யாழினி
06. அ.கிருஷாந்தன்
07. த.சரண்ஜா
08. உ.ஜெரூஷா ஜெனிபர்
09. வி.அனுராதா

**ஊர்காவற்றுறை**
10. வி.ஸர்மிளா
11. வி.நிதர்சனா

**ஆழியவளை**
12. உ.கஜிபன்
13. க.அனுசியா

**அனலைதீவு**
14. க.நிதர்சிகா
15. ச.சர்பினா

**பாண்டவெட்டை**
16. சு.திரிசாள்
17. சு.கிறிஸ்ரீனா
18. சு.சுதர்சன்
19. அ.அனித்தா
20. தே.டனிசியா
21. சு.சுதாகரன்
22. சு.பராசக்தி
23. மோ.ஜெசிந்தா

*வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
+குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 01 | × | × | × | 02 |
| | × | 03 | | | | | × | |
| | × | 04 | × | | | | 05 | |
| | × | 06 | | | | × | × | |
| 07 | | | 08 | | | | | |
| 10 | | × | | × | | | 09 | × |
| | | | 11 | | | × | | |
| | | | × | | | 12 | | |
| | 13 | 14 | | | | | × | 15 |

## குறுக்கெழுத்துப் போட்டி 125

**இடமிருந்து வலமாக**

03. இவன் உக்கிரத்தோடே திராட்சரசப் பந்தியை விட்டெழுந்து அரமனைத்தோட்டத்திற்குப் போனான்.

06. தீமைக்கு சரிகட்டுவேன் என்று சொல்லாதே; கர்த்தருக்குக் ............ அவர் உன்னை இரட்சிப்பார்

08. அபிமெலேக்கின் அப்பா

11. "இதோ நாங்கள் உமக்கு முன்பாகக் குற்றத்திற்குள்ளானவர்கள்" என பிரார்த்தித்தவன் (குழம்பியுள்ளது)

13. எரேமியாவை துரவிலே போட்டபோது அவனுக்காக ராஜாவிடம் மன்றாடி விடுவித்தவன்

**வலமிருந்து இடமாக**

01. கர்த்தரிடத்தில் திரும்பாதபடி தன் கழுத்தை அழுத்தமாக்கி, தன் இருதயத்தை கடினப்படுத்தியவன்

05. இவன் இஸ்ரவேலில் தீர்க்கதரிசியும், நியாயாதிபதியாகவும் இருந்தான்

09. பிடித்திருந்த சால்வையை கிழித்ததால் தன் ராஜ்யபாரத்தை இழந்தவன்

12. "துக்கத்தினால் என் கண்ணும், என் ஆத்துமாவும், என் வயிறுங்கூட கருகிப்போயிற்று" என்றவர்

**மேலிருந்து கீழாக**

02. இவன் தன் பள்ளி அறையிலே படுத்திருக்கும் போது கொல்லப்பட்டான்

04. கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்ய தன்னை விற்றுப்போட்டவன்

08. "உத்தம வேதபாரகன்" என அர்தசஷ்டாவினால் கூறப்பட்டவன்

09. சாமுவேல் சொல்வதைக் கேட்டு நெடு தாங்கிடையாய்த் தரையிலே விழுந்தவன்

10. யோசபாத்தின் தாய்

**கீழிருந்து மேலாக**

07. கீயோன் ஆற்றிலே அணை கட்டின ராஜா

13. அகோலிபாள் என்று பெயர் பெற்ற நகரம்

14. இவன் கப்சேயேல் ஊரைச் சேர்ந்தவன்

15. இஸ்ரவேலர் கானானியரின் பட்டணங்களை சங்காரம் பண்ணிய இடத்திற்கு இவ்வாறு பெயரிட்டனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❒ போதகர் வை.தேவதாஸ்




கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான வாலிப சகோதர சகோதரிகளே! இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல்வாழ்த்துக்கள்.

**11கொரிந்தியர் 2:14 கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி....**

கர்த்தருக்கு நீங்கள் உண்மையாக இருக்கும் பொழுது அவர் உங்களை எல்லாவற்றிலும் வெற்றி சிறக்கப் பண்ணுகிற தேவனாக இருக்கின்றார்.

என்னால் சரியாக படிக்க முடியவில்லை. எனக்கு சரியான வேலை கிடைக்கவில்லை, எனக்கேற்ற திருமண வாழ்வு அமையவில்லை; எப்பவுமே எனக்கு எல்லாவற்றிலும் தோல்வியாகவே இருக்கிறது என நீங்கள் உள்ளான வாழ்வில் கலங்கிக் கொண்டிருக்கலாம். பிரியமான வாலிபப் பிள்ளைகளே, சோர்ந்து போகவேண்டாம். அனைத்திலும் எங்களை ஜெயம் அடையப்பண்ணி எங்கள் தலையை உயர்த்தக்கூடிய சர்வ வல்லமையுள்ள தேவன் நம்முடன் இருக்கிறார். உங்களுக்காக நானும் ஜெபிக்கிறேன். நீங்களும் முழுவிசுவாசத்தோடு அவரை நோக்கி ஜெபம்பண்ணுங்கள். நிச்சயம் இயேசப்பா உங்களுக்கு அற்புதத்தைச் செய்வார்.

அத்தோடு வாலிபப்பிள்ளைகளே! தொடர்ந்தும் மிகக் கருத்தாக இச் சஞ்சிகையை வாசியுங்கள். அத்தோடு இரட்சிக்கப்பட்ட, இரட்சிக்கப்படாத புதிய வாலிபர்களுக்கும் இச் சஞ்சிகையை அறிமுகம் செய்யுங்கள். இணையப் பழக்கம் பெருகிவிட்டதனால் வாசிப்பு பழக்கம் அருகிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வரும் இக் கால சூழ்நிலையில் மிகுந்த அர்ப்பணிப்புடன் வெளிவரும் இச் சஞ்சிகையை வாசித்துப் பலன்பெறும்படி உங்களைத் தயவுடன் வேண்டுகின்றேன்.

கடந்த சஞ்சிகையில் சாது சுந்தர் சிங்கின் வாழ்க்கை வரலாற்றின் ஒரு பகுதியைப் பார்த்தோம். இவ் இதழில் அதன் தொடர்ச்சியைப் பார்ப்போம் வாருங்கள்.

கிறிஸ்தவ மார்க்கத்தை எதிர்த்துப் போராடும் ஓர் எதிர்ப்பாளனாக சுந்தர் சிங் தன்னை மாற்றிக் கொண்டு வேதாகமப் பிரதிகளை பொது வெளியில் தீயிட்டு எரிப்பதும் கிறிஸ்தவ மிஷனெரிகளை காயப்படுத்துவதும் போன்ற பல கிறிஸ்தவ எதிர்ப்பு வேலைகைளில் சுந்தர்சிங் ஈடுபட்டதனைக் குறித்து கடந்த இதழில் பதிவிட்டிருந்தேன்.

வாலிபத்தின் துடிப்பில் கிறிஸ்தவ மார்க்கத்திற்கு விரோதமாக மிக மும்முரமாக சுந்தர்சிங் செயற்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது ஒரு கட்டத்தில் அவர் மிகவும் குழப்பம் அடைந்தவராக மாறினார். மனதில் சமாதானம் இல்லை. எல்லாமே ஒரு வெறுமையான நிலை என்ற சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டார். அவரது மனம் இவ் உலக வாழ்வை வெறுத்தது.

இக் கட்டத்தில் அவர் ஓர் இறுதித் தீர்மானத்திற்கு வந்தார். தன் வாழ்வில் உண்மையான சமாதானத்தை எப்படியாவது கண்டுபிடித்துவிட வேண்டும். அப்படி அந்த சமாதான மனநிறைவு கிடைக்காதுவிட்டால் தான் வாழும் வீட்டிற்கு அருகில் கடந்து செல்லும் ரயில் முன்பதாக விழுந்து தனது உயிரை தானே மாய்த்துக் கொள்ள வேண்டும் என தன் மனதில் உறுதியாகத் தீர்மானித்தார். (நிற்க..)

பிரியமான தேவ பிள்ளைகளே! உங்கள் வாழ்வின் இக்கட்டான சூழ்நிலையில் உண்மையாக இயேசு உங்களை நேசிக்கிறார். அவர் நிச்சயம் ஏதோ ஓர் வழியில் உங்களுக்கு உதவி செய்வார். ஆனால் நீங்கள் ஒரு நாளும் உங்கள் உயிரை மாய்த்துக் கொள்ளக்கூடாது.

பெற்றோர் ஏசிவிட்டனர் என பிள்ளைகள் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொள்ள முற்படக்கூடாது. பரீட்சையில் சித்தியடையவில்லை என்ற விரக்தியால் தற்கொலை செய்த பிள்ளைகள் எத்தனைபேர்? வாலிபத்தில் காதல் எனும் மாயையில் சிக்கி தங்கள் வாழ்வை சிரழித்த வாலிபர்கள் எத்தனைபேர்?

இன்று இதனை வாசிக்கின்ற சகோதரனே, சகோதரியே.. **அப்போஸ்தலர் 16:28 நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ் செய்துகொள்ளாதே.** என்று உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

அன்று ஓர் அதிகாரி தனது வேலை பறிபோகப்போகின்றது என்ற மனவிரக்தியில் பட்டயத்தால் தன்னைத் தானே குத்தி தற்கொலை செய்யப்பார்த்தார். அப்பொழுது பவுல் என்ற தேவ மனுஷன்; இவ் வார்த்தையைச் சொல்லி அவனைத் தடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றும் இச் சஞ்சிகை மூலமாக தேவன் உங்களுடன் இடைபட விரும்பு கின்றார். உங்களது முடிவினை மாற்றிக் கொண்டு நீங்கள் வாழ்வடைய வேண்டும் என தேவன் எதிர்பார்க்கின்றார். அன்று அந்த அதிகாரி தன் பதவியின் நிமித்தம் தற்கொலைக்குப் போனான். இன்று நீங்கள் எதற்காக தவறான முடிவை எடுத்தீர்களோ? அதனை நான் அறியேன். ஆனால் உங்கள் மேல் அன்புள்ள ஆண்டவர் அதனை அறிவார். அவர் உங்களை நேசிக்கிறார். அவர் உங்களுக்கு சொல்லும் வார்த்தை இது தான்.

**"நீ உனக்கு கெடுதி ஒன்றுஞ் செய்து கொள்ளாதே"**

சுந்தர் சிங்கின் வாழ்க்கை வரலாற்றுக்கு வருவோம். உண்மையான சமாதானத்தைக் கண்டு பிடிக்க வேண்டும். அல்லது ஓடும் ரயிலின் முன்பதாக விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும். இதுவே சுந்தரின் இறுதி தீர்மானமாக இருந்தது. குறிப்பிட்ட ஓர் நாள் அதிகாலை மூன்று மணிக்கெல்லாம் அவர் எழுந்துவிட்டார். எழுந்தவர் குறித்து தனது சரீரத்தை சுத்தப்படுத்தி இறை தியானத்தில் அமர்ந்தார்.

இதற்கிடையில் வாசகர்களே, அதிகாலை ஜெபத்தைக் குறித்து சற்று உங்களுக்கு எழுத விரும்புகின்றேன். அநேக ஊழியக்காரர்கள், பரிசுத்தவான்கள் போன்றோர் அதிகாலையில் எழும்பி தெய்வீகக் கிருபைக்காக காத்திருந்து அதற்காக ஜெபித்து பெற்றுக்கொண்ட வரலாறுகளை நாம் அறிவோம்.

தூய பிரான்சிஸ் என்ற துறவியார் அசிசி என்ற பட்டணத்தில் வாழ்ந்து வந்தார். இவர் அதிகாலை வேளையில் எழும்பி மணிக்கணக்காக முழங்காலில் நின்று "தேவனே எனக்கு கிருபை தாரும்" என்று ஜெபிக்கும் பழக்கத்தை உடையவராக இருந்துள்ளார்.

**புலம்பல் 3:22-23 (22.) நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. 23. அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரியதாயிருக்கிறது.** நாம் வாழ்வது ஆண்டவரின் கிருபையே. ஒவ்வொரு நாளும் புதிதாயிருக்கிற அந்தக் கிருபையையும், இரக்கத்தையும் அதிகாலை ஜெபத்தின் மூலமாக நம்பிக்கை யுடன் தேவனிடம் பெற்றுக் கொள்ள வேண்டும். காலை வேளையில் அவருடைய அளவற்ற கிருபையை ருசி பார்ப்போமாக.

பகலின் குளிர்ச்சியான வேளையில் கர்த்தராகிய தேவன் ஏதேன் தோட்டத்தில் இறங்கி ஆதாமோடு உலாவினார் எனப்பார்க்கின்றோம். அதிகாலை மூன்று மணி முதல் ஐந்து மணி வரையிலும் ஒரு நாளின் குளிர்ச்சியான இனிமையான நேரம் என வேதாகம ஆராட்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர். அந்த நேரத்தில் தான் பூமியெங்கும் குளிர்ச்சியான மழை பெய்கின்றது. இஸ்ரவேல் ஜனங்களுக்கு மன்னா பொழிந்த நேரமும் அந்த நேரமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலையில் புல்லின் மேல் பனித்துளிகள் மென்மையாக இறங்கு வதைப் போல் தேவனின் அளவற்ற கிருபையும் அதிகாலை ஜெபத்தில் நம்மேல் இறங்குகின்றது. தேவப்பிரசன்னம் இனிமையானதாக நம்மை மூடுகின்றது. ஒரு நாளில் இருபத்து நான்கு மணித்தியாலங்கள் உண்டு என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். எந்த நேரத்திலேயும் நாம் தேவனை நோக்கிப் பார்க்க முடியும். அது சத்தியம். அதனை நான் மறுதலிக்கவில்லை. இருப்பினும் கர்த்தரைச் சந்திப்பதற்கு சிறந்த நேரம் அதிகாலையே.

"அதிகாலையில் உம் திருமுகம் தேடி அர்ப்பணித்தேன் என்னையே" என்ற பாடல் உங்களுக்கு ஞாபகம் வருகின்றதா? நல்லது. இனி வரும் நாட்களில் அதிகாலை ஜெபத்தை உங்கள் வாழ்வில் கொண்டு வாருங்கள். அதிகாலையில் எழும்பும் பொழுதே தேவ பிரசன்னத்தின் எதிர்பார்ப்போடு எழும்ப வேண்டும். ஆண்டவருக்கு கன மகிமையை கொடுப்பதற்கு அடையாளமாக ஒரு நாளின் முதற்பகுதியை ஆண்டவருக்கு கொடுத்துப்பாருங்கள். அப்பொழுது தேவ பிரசன்னம் உங்களை மூடும். அந்த நாள் முழுவதும் தேவனாகிய கர்த்தர் உங்களோடிருப்பதனை நீங்கள் உணருவீர்கள். அத்தோடு அந்த நாளில் சந்திக்க வேண்டிய பிரச்சினைகளையும், போராட்டங்களையும் சந்திக்க வேண்டிய தேவ பெலன் உங்களுக்கு கிடைக்கும்.

**01. ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து... ஆதியாகமம் 22**

விசுவாசத்தின் தகப்பனாகிய ஆபிரகாமுக்கு அதிகாலையில் எழும்பும் வழக்கம் காணப்பட்டது.

**02. அதிகாலையில் யாக்கோபு எழுந்து, தன் தலையின் கீழ் வைத்திருந்த கல்லை எடுத்து, அதைத் தூணாக நிறுத்தி... ஆதியாகமம் 28:18**

அதிகாலையில் எழுந்த யாக்கோபு தேவனை நோக்கி பொருத்தனை ஜெபத்தை ஏறெடுத்தார்.

**03. விடியற்காலத்தில் நீ ஆயத்தமாகி, சீனாய் மலையில் ஏறி, அங்கே மலையின் உச்சியில் காலமே என் சமூகத்தில் வந்து நில்... யாத்திராகமம் 34:2**

இன்னும் பல பரிசுத்தவான்களை வேதாகமத்தில் இருந்து காண்பிக்க முடியும். இருப்பினும் சுருக்கமாக முடிக்கின்றேன்.

பிரியமானவர்களே! அதிகாலையில் எழுந்து ஜெபிப்பது முதலில் சற்று சிரமமாகக் காணப்படலாம். சரீரகளைப்பு, சோம்பல், தூக்க மயக்கம் என்பன அதிகாலை ஜெபத்தின் எதிரிகள். ஆனால் நாம் அதனை மேற்கொண்டு ஜெபிக்கும் பொழுது, தொடர்ந்து அதனை நாம் நமது வாழ்வில் பழக்கப்படுத்தும் பொழுது தேவ சமூகம் நமக்கு அளவற்ற ஆனந்தமாக இருக்கும். பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதும் எமக்குத் துணையாக இருப்பார்.

மறு சஞ்சிகையில் சந்திக்கும் வரை தேவ கிருபை உங்களோடிருப்பதாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❒ திருமதி. V.பிலிப்




**நீதிமொழிகள் 31:10 அவளுடைய விலை முத்துக்களைப்பார்க்கிலும் உயர்ந்தது.**

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதரிகளே இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். நாட்கள் நெய்கிறவன் எறிகிற நாடாவிலும் தீவிரமாக ஓடுவதை காணும் போது அவருடைய வருகை மிகவும் சமீபமாய் இருக்கிறதைக் காண்பிக்கிறது.

முத்து அது விலை மதிப்பில்லாதது. அதை சாதாரணமாக வாங்கிவிடமுடியாது. தங்கள் உயிரை பணயம் வைத்து ஆழ் கடலுக்குள் சென்று அனேக சிப்பிகளை எடுத்து வந்து அதற்குள் ஏதோ ஒரு சிப்பிக்குள் இருக்கும் அந்த முத்து எடுப்பார்கள். அது விலை மதிப்பில்லாதது.

சகோதரிகளே, அப்படிப்பட்ட முத்திலும் விலை உயர்ந்ததாக என்னையும் உங்களையும் ஆண்டவர் பார்க்கிறார்.

**நீதிமொழிகள் 18:22 மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான்.**

**நீதிமொழிகள் 11:16 நல்லொழுக்கமுள்ள ஸ்திரீ மானத்தைக் காப்பாள்.**

**நீதிமொழிகள் 19:14 புத்தியுள்ள மனைவியோ கர்த்தர் அருளும் ஈவு.**

**நீதிமொழிகள் 12:4 குணசாலியான ஸ்திரி தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள்.**

**நீதிமொழிகள் 14:1 புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி பெண்களை வேதம் உயர்வாக காண்பிக்கிறது.

அதே நேரம்;

**நீதிமொழிகள் 12:4 இலச்சை உண்டு பண்ணுகிறவளோ அவனுக்கு எலும்புருக்கியா யிருக்கிறாள்.**

**நீதிமொழிகள் 14:1 புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப் போடுகிறாள்.**

என்றும் காண்பிக்கிறது.

முத்தாக வாழ வேண்டிய, புருஷனுக்கு கிரீடமாக இருக்க வேண்டியவள் பன்றிக்கு முன் போடப்பட்ட முத்தாக மாறின இரு பெண்களைக் குறித்து வேதாகமத்தில் காணமுடியும்.

## 01. ஏவாள்

**ஆதியாகமம் 3:1 தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு ஜீவன்களைப் பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது. அது ஸ்திரீயை நோக்கி: நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது.**

தேவன் உருவாக்கின முதல் பெண் மணி, விசேஷித்தவள், தேவ சாயலில் உருவாக்கப்பட்டவள். செய்யக்கூடாத காரியத்தை இங்கே செய்கின்றாள். தனிமையில் பேசக்கூடாத ஒருவனுடன் பேசிக் கொண்டிருக்கிறாள். தந்திரமானவன் பிசாசு. கேள்வி கேட்கும் போது அவள் ஒரு வார்த்தையும் மறு உத்தரவு சொல்லாமல் போயிருந்தால் பிரச்சினை முடிவுக்கு வந்திருக்கும்.

ஆனால் அவள் தந்திரமானவனுக்கு பதில் கொடுக்க முற்படுகின்றாள். இன்றைக்கும் அனேக பெண்கள் இதிலே தவறிவிடுகின்றார்கள். பேசக்கூடாதவர்களுடன் தொலைபேசியில் மணிக் கணக்கில் பேசி தங்கள் குடும்ப வாழ்க்கையை தொலைத்து விடுகின்றார்கள். கணவன், பிள்ளைகள் எல்லாவற்றையும் மறந்து தொலைபேசியில் தங்கள் நேரத்தை செலவிட்டு இறுதியில் விவாகரத்தில் அவர்கள் வாழ்க்கை போய்நிற்கிறது. கணவன் இல்லாத நேரத்தில் எந்த ஆணோடும் தொலைபேசியில் உரையாடுவதை தவிர்த்து கொள்ளுங்கள். திருமணமான, திருமணமாகாத - பெண்கள் யாராக இருந்தாலும் கவனமாக, ஜாக்கிரதையாக இருக்க வேண்டியது அவசியம். அதிக பேச்சும், அவசிய மற்ற பேச்சும் உங்கள் வாழ்க் கையை ஆபத்தில் முடிக்கும். இந்த ஏவாள் பிசாசின் தந்திர வார்த்தைக்குள் சிக்கிக் கொண்டாள்.

பிசாசோடு சாதாரண ஒரு உரையாடல்தான். இறுதியில் அந்த அழகிய ஏதேன் தோட்டத்தைவிட்டு துரத்தப்பட்டு வாழ்நாள் சாபத்துக்குள்ளாகிறார்கள். இன்றைக்கும் சகோதரிகளே, உங்களுடைய குடும்பத்திற்கும் இப்படிப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனையான சூழ்நிலை வேண்டாம். அழகிய ஏதேன் தோட்டம் போல் இருக்கும் உங்கள் குடும்பங்களை கெடுக்க குள்ளநரிகளின் வார்த்தைகளைப் போன்ற பிசாசின் தந்திர மான வார்த்தையை ஆரம்பத்திலேயே இனங்கண்டு நிறுத்திவிடுங் கள். முத்துக் களைப் பார்க்கிலும் விலை உயர்ந்தவள் என்பதை எப்போதும் மனதில் கொள்ளுங்கள். ஆகாத சம்பாஷனைகள் நல்லொழுக்கங் களைக் கெடுக்கும் என்று வேதம் சொல்கின்றது.

## 02. வஸ்தி

127 நாடுகளை அரசாண்ட ஆகாஸ் வேரு ராஜாவின் அழகிய முத்துப் போன்ற மனைவி சகல வசதிகளும், மேன்மைகளும், கனமும் நிறைந்தவள் தான் இந்த வஸ்தி. இவளுக்கு எந்தக் குறைவும் ராஜா வைக்க வில்லை. ராஜா விருந்து வைக்கின்ற நாளில் பெண்களுக்கென்று வஸ்தியும் விருந்து வைக்கிறாள். இப்படியான நேரத்தில்:

**எஸ்தர் 1:10-12 (10.) ஏழாம் நாளிலே ராஜா திராட்சரசத்தினால் களிப்பாயிருக்கும் போது, மகா ரூபவதியாயிருந்த ராஜஸ்திரீயா கிய வஸ்தியின் சௌந்தரியத்தை ஜனங்களுக் கும் பிரபுக்களுக்கும் காண்பிக்கும்படி, ராஜகிரீடம் தரிக்கப்பட்டவளாக அவளை ராஜாவுக்குமுன்பாக அழைத்துவரவேண்டு மென்று, 11. ராஜாவாகிய அகாஸ்வேருவின் சமுகத்தில் சேவிக்கிற மெகுமான், பிஸ்தா, அற்போனா, பிக்தா, அபக்தா, சேதார், கர்காஸ் என்னும் ஏழு பிரதானிகளுக்கும் கட்டளையிட் டான். 12. ஆனாலும் பிரதானிகள் மூலமாய் ராஜா சொல்லியனுப்பின கட்டளைக்கு ராஜஸ்திரீ யாகிய <u>வஸ்தி வரமாட்டேன் என்றாள்;</u> அப் பொழுது ராஜா கடுங்கோபமடைந்து, தனக் குள்ளே மூர்க்கவெறி கொண்டான்.**

இன்றைக்கும் வஸ்தி யைப் போல எல்லா வசதிகள் இருந்தாலும் சில பெண்கள் தங்கள் கணவன்மாருக்கு கீழ்ப் படிய மறுக்கிறார்கள். அவர் களுடைய வார்த்தைகளை மதிக்காமல், துணிகரம் கொண்டு முரட்டாட்டம் பண்ணுகிறார்கள். இதனால் கணவன் மனை விக்கு இடையில் பிரச்சினை, குடும்பத்தில் சமாதானம் இல்லை, இறுதியில் குடும்பம் பிரிய நேரிட்டு விவகாரத்தை நோக்கி செல்கிறார்கள். புருஷ னுக்கு கிரீடமாக இருக்க வேண் டிய வஸ்தி. அவள் மூர்க்கம் கொள்ள காரணமாக அமைந் தாள்.

**1சாமுவேல் 15:22 பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படி தல் உத்தமம்.**

பலி ஆராதனைக்கு அடையாளமாயிருக்கிறது. கீழ்ப்படிய விரும்பாமல் எவ் வளவு தான் தேவனை ஆரா தித்தாலும் அதை வேதம் அருவருக்கிறது. கீழ்ப்படியா மையோடு கூட தாழ்மையற்ற காரியமும் அவளுக்குள் இருந் தது. மேன்மைக்கு முன்னா னது தாழ்மை என்று வேதம் கற்றுக்கொடுக்கிறது.

இன்றைக்கு அனேக பெண்கள் மேன்மையடைய முடியாதபடி அவர்களுடைய தாழ்மையற்ற காரியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதாயிருக்கிறது. தாழ்மை இல்லை என்றால் அவர்களை பெருமை ஆட்கொண்டிருக்கும். பெருமை உள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நின்றால் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் எந்தவிதமான மேன்மையான காரியங்களையும் பெற்றுக் கொள்ள முடியாது. வாழ்க்கை கண்ணீரிலேயே முடிவடைந்துவிடும்.

ஆகவே முத்துக்களைவிட விலை உயர்ந்த சகோதரிகளே, ஏவாள், வஸ்தியைப் போல் வாழாமல் ஆகாத சம்பாஷனைகளையும் தொடர்புகளையும் துண்டித்து கீழ்ப்படியாமை, தாழ்மை இன்மை போன்ற காரியங்களை விட்டு முத்துக்களைப் பார்க்கிலும் விலை உயர்ந்தவர்களாக வாழ்ந்து தேவனுடைய வருகை வரும் வரை பூமியில் ஒரு சமாதான வாழ்க்கை வாழ்கிறவர்களாய் ஜீவிப்போமாக.



# வினா விடை - 127

01. "நீ பலவான்களை மிதித்தாய்" - மிதித்தது யார்?

02. தன் குமாரர்களுக்கு பத்து அப்பங்களையும் பத்து பால் கட்டிகளையும் கொடுத்தனுப்பின தகப்பன் யார்? கொண்டுபோனது யார்?

03. "வேதத்தைக் குறித்து பட்சபாதம் பண்ணினார்கள்" யார்?

04. "தேவன் அருளிய வேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது" என வாசிப்பதெங்கே?

05. முதியோரின் ஆலோசனையைத் தள்ளிவிட்டு வாலிபரின் ஆலோசனையின்படி நடந்த ராஜா யார்?

06. "நீ கெட்டிக்காரன்" என்று சொல்லப்பட்டது யார்?

07. "எனக்கும் உனக்கும் என்ன" என்றது யார்? யார்?

08. "நீ ஆசீர்வதிக்கப்பட்டவன்" என்று சொல்லப்பட்டது யார்?


09. "நீ உன் தேசத்தைக் கெடுத்து உன் ஜனத்தைக் கொன்று போட்டாய்" என வாசிப்பதெங்கே?

10. "நீ இளைஞன்" என்று சொல்லப்பட்டது யார்?

வசந்தத்தின் ஆண்டு - 2025
இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்.
ஏசாயா 43:19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# புனித செபாஸ்டின் - 288

## நான் நிற்கும் பாறை கிறிஸ்துவே

கிறிஸ்தவர்கள் மிகவும் துன்புறுத்தப்பட்ட காலம் அது. பலர் விசுவாசத்தைவிட்டு வழி விலகிப் போகும் நிலைகள் கூட ஏற்பட்டன. மக்களை திடப்படுத்தவும், தைரியப்படுத்தவும் இறைத் தொண்டர் களின் உதவி மிகவும் தேவையாயிருந்தது.

அப்படிப்பட்ட ஓர் காலகட்டத்தில் கால் என்ற நாட்டில் பிறந்தவரே செபாஸ்டின். சிறுவயதிலேயே கிறிஸ்துவில் தீவிரமாய் வளர்ந்தார். இராணுவத்தில் இணைந் தால் கிறிஸ்தவர்களை துன்புறுத்துவதனைக் குறைக்க முடியும் என்ற நோக்குடன் இராணுவத்தில் இணைந்தார்.

ஜெபாஸ்டின் அற்புதங்களை நிகழ்த்தும் வரங்களை இறைவனிடமிருந்து பெற்றிருந்தார். ஒரு முறை, ஆறுவருடம் பேசும் சக்தியை இழந்த ஓர் பெண்ணுக்கு ஜெபித்த உடனே, அப் பெண் குணமடைந்து பேசினாள். பல வியாதிஸ்தர்கள் குணப்படுத்தப்பட்டனர்.

இவரின் அற்புதமான இறைபக்தியால் பலர் இரட்சிக்கப்பட்டனர். ரோம கவர்னர் குரோமட்டியஸ் என்பவர் தன் குடும்பத்தோடு ஞானஸ்நானம் பெற்றர். எனவே சிறையில் அடைக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் விடுதலை பெற்று, நிம்மதிப் பெருமூச்சும் விட்டனர். கிறிஸ்துவை மகிமைப்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடீரெனத் தீவிரவாதிகளின் சதிபோல டயோகிலிடயன் என்னும் ரோம சக்கரவர்த்தி எழும்பி தன் சதிவேலையைத் தொடங்கினான். கிறிஸ்தவர்களுக்கோ தங்கள் விசுவாசத்தில் நிலைக்கவும், புதுப்பிக்கவும் அது ஏதுவாயிற்று.

செபாஸ்டின் தந்திரமாகப் பிடிக்கப்பட்டு அம்பெய்து கொல்லும் கொலை யாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டார். உடல் முழுவதும் அம்புகளால் தைக்கப்பட்ட அவர் சரிந்து கீழே விழுந்தார். மரித்துப் போனார் என்று விடப்பட்ட அவர் ஆண்டவரின் பெலத்தால் எழுந்து நடந்தார். கிறிஸ்தவர்களின் பக்தி வாழ்வை கிறிஸ்துவில் நிலைக்கச் செய்தார்.

உபத்திரவங்களிலே தான் உண்மையான விசுவாசம் வெளிப்படும் என்பதை வெளிக்காட்டிய இவர் மீண்டும் பிடிக்கப்பட்டு, தடிகளால் அடிக்கப்பட்டு, ஓர் குளத்தில் வீசப்பட்டார். கிறிஸ்துவின் இரத்த சாட்சியானார்.

**அன்பரே! உங்கள் வாழ்வு கிறிஸ்துவின் மேல் கட்டப்பட்டு உள்ளதா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: இயேசுவுக்குச் சொந்தமானவர்களை சாத்தானிடமிருந்து பறிக்க, சிரமம் பாராமல் உழைக்க வேண்டும். — செபாஸ்டின்**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜனவரி 20**



# லெஸ்லி நியூபிகின்
## 1909 - 1998

### பிறப்பை சிறப்பிப்போம்

வெள்ளை உருவம், கொள்ளை கொள்ளும் பார்வை. கற்றோரும் காது கொடுத்துக் கேட்கும் பேச்சு. அலை போன்ற தமிழ் ஓசைக்குச் சொந்தக்காரர், சிந்தனையாளர், திருச்சபையின் வழிகாட்டி, இறைவனின் அருட்கொடை அவர் தான் பேராயர் லெஸ்லி நியூபிகின்.

1909ஆம் ஆண்டு ஜனவரி 08ஆம் நாள் இங்கிலாந்து நாட்டில் பிறந்தார். இறைவனைத் தேடும் வாஞ்சை இளம் வயதில் ஏற்பட்டது. இறையியல் படிப்பைத் தொடர்ந்தார். கிறிஸ்தவ இயக்கத்தில் இணைந்தார். கிறிஸ்துவின் நற்செய்தியை உலகமெங்கும் கூறும் ஆர்வம் இவரை உந்தித்தள்ளியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1936ஆம் ஆண்டு திருமணமான தன் இளம் மனைவி ஹெலன் அம்மையாருடன் இந்தியா புறப்பட்டு வந்தார். இறையருள் உந்தப்பட்ட இவர் தமிழைச் சரளமாகப் பேசும் கலையில் தேர்ந்தார்.

1947ஆம் ஆண்டு மதுரையில் பேராயராகப் பொறுப்பேற்றார். பின்னர் 1965ஆம் ஆண்டு சென்னையிலும் பேராயராகப் பொறுப்பேற்றார்.

இவர் பதவி என்ற சிங்காசனத்தில் அமர்ந்து வேடிக்கை பார்த்தவரல்ல. மாறாகப் பிறர் வாழ்வோடு இணைந்து அவர்கள் வாழ்வையும் சிறப்பித்தவர்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களைத் தேடிச்சென்று அவர்களோடு தங்கி அவர்கள் குறைகளைக் களைந்தவர். கிறிஸ்துவின் சொல்லை அனுதினமும் செயலில் காட்டியவர். தாழ்த்தப்பட்ட மக்களின் பாதுகாவலனாய் விளங்கி, சாதி ஏற்றத் தாழ்வுகளை ஒழிக்கப்பாடுபட்டவர். நீதிக்குரல் கொடுத்தவர்.

தென்னிந்திய திருச்சபையை புகழின் உச்சிக்கு உயர்த்தியவர். இவர் ஓர் சிறந்த எழுத்தாளர். இவரது அருளுரைகள் இன்றும் எண்ணற்றவர்களால் பயன்படுத்தப்படுகின்றன.

வாழ்வு முழுவதும் மனித நேயத்தை மனிதருக்கு கற்பித்த பேராயர் லெஸ்லி நியூபிகின் அவர்கள் 1998ஆம் ஆண்டு ஜனவரி 30இல் இறைவனில் ஐக்கியமானார்.

**அன்பரே! உமது பிறப்பு சிறப்பாக்கப்பட என்ன முயற்சி செய்கிறீர்?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: ஒற்றுமையின் சீர்குலைவுக்கு வித்திடுகிறவர்கள் சுவிசேஷத்தின் எதிராளிகள் — லெஸ்லி நியூபிகின்**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" ஜூலை 28**

## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

"சகோதரர் இருவருள் ஒருவன், தான் சம்பாதித்த அனைத்துப் பொருள்களையும் எடுத்துக் கொண்டு வேறு தேசத்திலிருந்து தன் சுய தேசத்திற்கும், ஒருவன் சுய தேசத்திலிருந்து வேறு தேசத்திற்கும் சென்றான்." யார் இந்த சகோதரர்கள்?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*

**அனல் 2025 பங்குனி - சித்திரை மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:**

யோவாப் (IIசாமுவேல் 20:9–10)

*சரியான விடை எழுதிய அனைவருக்கும் பாராட்டுக்கள்!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❒ போதகர் ஜோஹணன் டி.பிலிப்




**உபாகமம் 6:18-19 (18) நீ நன்றாயிருக்கிறதற்கும், கர்த்தர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த நல்ல தேசத்தில் நீ பிரவேசித்து, அதைச் சுதந்தரிப்பதற்கும், 19. கர்த்தர் தாம் சொன்னபடி, உன் சத்துருக்களையெல்லாம் உன் முகத்திற்கு முன்பாகத் துரத்திவிடுவதற்கும், நீ கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையும் நன்மையுமாய் இருக்கிறதைச் செய்வாயாக.**

மோசேயினால் தேவன் மூலம் இஸ்ரவேல் மக்களுக்கு கொடுக்கப்பட்ட ஒரு பிரமாணமாக அல்லது கட்டளையாக இந்த வேதவசனங்கள் காணப்படுகின்றது. இது மோசேயின் மூலம் கொடுக்கப்பட்ட எல்லாக் கட்டளைகள், பிரமாணங்களினையும் உள்ளடக்கிய ஒரு சுருக்கமாகக் காணப்படுகின்றது. இவ் வசனங்கள் இஸ்ரவேல் மக்கள் ஆசீர்வாதமாக இருப்பதற்கும் சமாதானமாகவும், சந்தோஷமாகவும் வாழ்வதற்கான அடிப்படைகளை எடுத்துக் கூறுகின்றவைகளாகவும் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனடிப்படையிலே;

**கர்த்தருடைய பார்வையில் செம்மையாய் இருப்பதும்**

**அவருடைய பார்வையில் நன்மையாய் இருக்கின்றதை செய்கிறதும்**

ஆகிய இரண்டு முக்கியமான பிரமாணங்களாக அமைகின்றது.

இங்கே செம்மையாய் இருத்தல் என்பது நமது பார்வையிலே செம்மையாய் இருப்பதைப் பற்றிக் குறிப்பிடப் படவில்லை. மாறாக அவருடைய பார்வையிலே செம்மையாக இருப்பதையும் செம்மையாக காணப்படுவதை செய்வதைப் பற்றியதுமாகும்.

## 01. செம்மை

இங்கே செம்மை என்பது பல வகையான அர்த்தங்களை உள்ளடக்கியதாக அமைகின்றது. அதாவது சரியானதைச் செய்தல், மெய்யானதைச் செய்தல், பிழையற்றதைச் செய்தல், பொருத்தமானதைச் செய்தல், மதிநுட்பமானதைச் செய்தல், மேலானதைச் செய்தல், ஏற்புநலமிக்கதைச் செய்தல், நேர்மையானதைச் செய்தல், நியாயமானதைச் செய்தல், முறையானதைச் செய்தல், நன்னடத்தை, துல்லியமானதைச் செய்தல் போன்ற பல்வேறு கருத்துக்களையும் அர்த்தங்களையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

இத்தகைய காரியங்களை நாம் செய்கின்ற போதும் அவை தேவனுடைய பார்வையில் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் தேவனுடைய வார்த்தைக்கு உட்பட்டவைகளாகவும் காணப்படுகின்றபோது மாத்திரமே இவைகள் செம்மையானவைகளாகக் கணிக்கப் படும். மாறாக மனித ஞானத்தின் படியோ சூழ்நிலைக்கு அமைவாகவோ நாம் செய்கின்ற காரியங்கள் எல்லாம் எமது பார்வைக்கு செம்மையானவைகளாகக் காணப்பட்டாலும் அவை எல்லாம் தேவனுடைய பார்வையிலே செம்மையானவை என கருதிவிட முடியாது.

**நீதிமொழிகள் 14:12 மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகின்ற வழி உண்டு: அதின் முடிவோ மரண வழிகள்.**

சில வேளைகளில் மனிதனுடைய சிந்தனைகள், நடவடிக்கைகள் மிகவும் மதிநுட்பம் வாய்ந்தவை போன்று காணப்படுகின்றன. அவைகள் பல வேளைகளில் மற்றவர்களையும் வியப்புக்குள்ளாக்கத்தக்கவைகளாக அமைந்துவிடுகின்றன. ஆனாலும் சில வேளைகளில் அதின் முடிவுகள் ஆபத்தானவைகளாகவோ அல்லது மரண வழிகளாகவோ அமைந்து விடுகின்றன.

இது மனித ஞானத்தினுடைய போதாமையும், தேவனின் வழிநடத்துதல் இல்லாத ஞானத்தின் அவல நிலையையும் எமக்குக் காண்பிக்கின்றது. எனவே மனிதனுக்குச் செம்மையாகத் தோன்றுகின்ற வழிகளெல்லாம் தேவனுக்கு செம்மையான வழிகளென்று நாம் கருதிவிட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரசங்கி 7:29 இதோ, தேவன் மனுஷனைச் செம்மையானவனாக உண்டாக்கினார்: அவர்களோ அநேக உபாயதந்திரங்களைத் தேடிக் கொண்டார்கள்: இதைமாத்திரம் கண்டேன்.**

தேவன் மனிதனை மிகவும் செம்மையானவனாகவே சிருஷ்டித்தார். மனிதன் சிருஷ்டிப்பின் போது கறையற்றவனாகவும் மேன்மையானவனாகவும் தேவ சாயலின்படியும் சிருஷ்டிக்கப்பட்டான். ஆனாலும் மனிதன் விழுகைக்கு உட்பட்டபோது அவன் அபாயதந்திரங்கள் நிறைந்தவனாகவும் தேவனுடைய திட்டத்திற்கு எதிராக செயற்படுகிறவனாகவும் மாறிவிட்டான். இதனால் மனிதன் பல காரியங்களை தேவ சித்தத்திற்கும் அவருடைய திட்டத்திற்கும் முரண்பாடாக செய்கிறவனாக மாறிப்போனான். இக்காரியங்கள் பல வேளைகளிலும் மனிதனுக்கு நன்மை அளிப்பதைக் காட்டிலும் தீமையையே உருவாக்குகின்றது என்பது தான் உண்மை. எனவே மனிதர்கள் இன்று படுகின்ற பல பாடுகளுக்கு அவர்களுடைய உபாய தந்திரங்களே காரணமாக அமைந்து விடுகின்றது என்பது ஒரு கசப்பான உண்மையே.

## 02. நன்மை

**உபாகமம் 6:19 கர்த்தர் தாம் சொன்னபடி, உன் சத்துருக்களையெல்லாம் உன் முகத்திற்கு முன்பாகத் துரத்திவிடுவதற்கும், நீ கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையும் நன்மையுமாய் இருக்கிறதைச் செய்வாயாக.**

இவ்வசனத்தின் கடைசிப் பகுதியில் தேவன் இஸ்ரவேலருக்கு கொடுத்த பிரமாணத்தில் முக்கியமாக அமைந்திருக்கிற இரண்டாவது காரியம் நன்மை செய்தலாகும். இங்கு நன்மை என்பது பல்வேறு அர்த்தங்களையும் கருத்துக்களையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. அதாவது வசதி, கருணை, ஆதாயம், பயன் தரக்கூடியவை, நற்கிரியை போன்ற பல அர்த்தங்களைக் கொண்டதாக விளங்கிக் கொள்ளப்படுகின்றது. இங்கு மனிதனுடைய பார்வையிலே பல காரியங்கள் நன்மையாகத் தோன்றலாம், ஆனாலும் தேவனுடைய பார்வையிலே அவை நன்மையாகத் தோன்றுமா? நாம் செய்த காரியத்தை தேவன் நன்மை எனக் கருதி அங்கீகரிப்பாரா? என்பதே மிக முக்கியமான கேள்வியாகும்.

**கலாத்தியர் 6:9 நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக: நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்.**

என பவுல் அப்போஸ்தலன் கலாத்தியர் திருச்சபைக்கு ஒரு கட்டளையாகவே கொடுத்திருக்கிறார். நன்மை செய்வது பல வேளைகளிலும் மனிதர்களுக்கு இயல்பாகவே வரக்கூடிய காரியம் ஒன்றல்ல. இங்கே பவுல் பல நன்மைகள் செய்து அதிலே சோர்ந்து போய்விடாதபடி தொடர்ந்தும் நன்மை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்திக் காண்பிக்கின்றார். நாம் செய்கின்ற நன்மைக்கு சில வேளைகளில் பலன் கிடைக்காமல் போனாலும் அவற்றை நாம் தொடர்ந்து செய்யும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். இங்கே பவுல் நாம் செய்கின்ற நன்மைக்கு ஏற்ற பலன் ஒருநாள் மனிதர்களாலேயோ அல்லது தேவனாலேயோ கிடைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைக் கூறி கலாத்திய விசுவாசிகளை உற்சாகப்படுத்துவதைக் காண முடிகின்றது.

நன்மை செய்வதற்கு மிக சிறந்த உதாரணமாக எமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவையே நாம் குறிப்பிடலாம். இயேசுகிறிஸ்து பூமியில் வாழ்ந்த நாட்களில் அநேகர் எதிர்த்த போதும் தூஷித்த போதும் அவரைக் கொல்வதற்கு முயற்சிகள் எடுத்த போதும் அவர் நன்மை செய்கிறவராகவே இப் பூமியில் சுற்றித்திரிந்தார். கிறிஸ்தவர்களாகிய நாம் அவரைப் பின் பற்றும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். நாமும் இப்பூமியில் இருக்கும் நாட்களில் மற்றவர்களுக்கு நன்மை செய்கிறதில் சோர்ந்து போகமல் இருக்க வேண்டும்.

**ஏசாயா 1:17 நன்மை செய்யப் படியுங்கள்.** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கே நன்மை செய்ய வேண்டியதை நாம் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு விடயமாக கூறப்பட்டுள்ளது. நாம் பல காரியங்களைக் கற்றுக்கொள்வதற்கு பிரயாசப்படுகின்றவர்களாகக் காணப்படுகின்றோம். ஆனாலும் நன்மை செய்தல் என்கின்ற ஒரு விடயத்தினை நாம் கற்றுக்கொள்ளும் ஒரு விடயமாகக் கருதுவதில்லை. ஆனால் வேதாகமத்திலே நன்மை செய்தல் என்கிற ஒரு விடயம் எமக்கு இயல்பாகவே வராததால் நாம் அதைக் கற்றுக்கொண்டு செய்ய வேண்டும் எனவும் இக்காரியத்திலே கிறிஸ்தவர்களாகிய நாம் முதிர்ச்சியடைய வேண்டும் எனவும் தேவன் எதிர்பார்க்கின்றார். எனவே நன்மை செய்தல் என்பது கிறிஸ்தவர்களாகிய எமக்கு தெரிவுக்குரிய ஒன்றல்ல மாறாக கட்டாயம் செய்ய வேண்டிய ஒன்றாகவே காணப்படுகின்றது.

**உபாகமம் 6:18-19 (18) நீ நன்றாயிருக்கிறதற்கும், கர்த்தர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த நல்ல தேசத்தில் நீ பிரவேசித்து, அதைச் சுதந்தரிப்பதற்கும், 19. கர்த்தர் தாம் சொன்னபடி, உன் சத்துருக்களையெல்லாம் உன் முகத்திற்கு முன்பாகத் துரத்திவிடுவதற்கும், நீ கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையும் நன்மையுமாய் இருக்கிறதைச் செய்வாயாக".**

இவ்வசனங்கள் ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் தமது வாழ்விலே கடைப்பிடிக்கவேண்டிய பிரமாணங்களாக அமைகின்றது. இவ்வசனங்கள் நாம் நன்றாக இருப்பதற்கு கிறிஸ்தவர்களாகிய எமக்கு தேவன் அருளிய ஆசீர்வாதங்களை சுதந்தரிப்பதற்கும் எம்முடைய சத்துருக்களின் பிடியிலிருந்து நாம் விலகியிருப்பதற்கும் இவ்விரு பிரமாணங்களான கர்த்தருடைய பார்வைக்கு செம்மையாக இருத்தல் மற்றும் அவருடைய பார்வையில் நன்மை செய்தல் என்கிறதான மாறா பிரமாணங்களை கடைப்பிடிப்பதோடு பிணைக்கப்பட்டுள்ளது.

ஆகவே அவருடைய பார்வையிலே செம்மையானதாய் காணப்படுகின்ற அவருடைய திட்டத்தினை எமது வாழ்விலே நிறைவேற்றும்படி நாம் அழைக்கப்பட்டுள்ளோம். அவருடைய திட்டத்தினை நாம் செயல்படுத்துகின்றபோது அத்திட்டம் எம்மைச் சுற்றியிருக்கிற அனைவருக்கும் நன்மை பயப்பதாக அமைகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❐ போதகர் வேதநாயகம் மகாராஜா

தொடர்ச்சி...

# ரோமர் நிருபம்

## ஓர் சுருக்க விளக்கம்

ரோமர் முதலாம் அதிகாரம் 1-17வரையான வசனங்களில் நிருபத்தை எழுதுவதற்கான நோக்கத்தைப் பவுல் தெரிவிக்கின்றார். அந்த நோக்கம் சுவிசேஷமும் தேவநீதியுமென சென்ற பகுதியில் பார்த்ததோடு விசுவாசத்தினால் உண்டாகும் நீதியைக் குறித்தும் பார்த்தோம்.

விசுவாசத்தினால் உண்டாகும் நீதி குறித்து தொடர்ந்து பார்ப்போமாகில் மாட்டீன் லூதர் இப்படிச் சொல்கிறார்: "தேவனின் நீதி என்ற பதத்திற்கு விளக்கம் தெரிந்தவுடன், மறுபிறப்பின் அனுபவம் கிடைத்தது போல் இருந்தது. அத்துடன், ஒரு திறந்த வாசல் வழியாக பரலோகத்திற்குள் நுழைந்தது போன்றும் எனக்குத் தோன்றியது. மேலும் தேவ வசனம் முழுமைக்கும் ஓர் புதிய பொருள் கிடைத்துவிட்டது" என்றார்.

இவ் வேதப்பகுதியின் மையக்கருத்து தேவனை விசுவாசித்த ஓர் அனுதின வாழ்வு. நீதிமான் தேவ நம்பிக்கையில் வாழவேண்டும்.

தீர்க்கதரிசியாகிய ஆபகூக் கி.மு 607இல் இதை உரைத்தார். **ஆபகூக் 2:4 இதோ, அகங்காரியாயிருக்கிறானே, அவனுடைய ஆத்துமா அவனுக்குள் செம்மையானதல்ல; தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்**. அப்போது யூதாவின் மேல் வரப்போகும் பாபிலோன் படையெடுப்பைக் குறித்ததாக இருந்தது. கி.மு 605இல் பாபிலோனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையெடுப்பு நடந்து மக்கள் அடிமைகளாக கொண்டு செல்லப்பட்டனர். ஆபகூக் உரைத்தது இந்த படையெடுப்பு இத்துடன் முடிந்துவிடவில்லை. நீதிமான்கள் விடுவிக்கப்படுவார்கள். அவர்கள் தாய் நாட்டுக்குத் திரும்ப வருவார்கள் என்பதே.

இயேசுவை விசுவாசித்து நீதிமான்களானவர்கள் தேவன் மீதுள்ள தொடர் நம்பிக்கையில் நிலைத்திருக்க வேண்டும். வாழ்வின் எந்த வேதனையின் பள்ளத்தாக்குகளின் அனுபவங்கள் ஏற்பட்டாலும் இரட்சித்த தேவனைத் தொடர்ந்து விசுவாசித்துக் கொண்டே இருங்கள். ஒரு நாள் எமது பரம நித்திய தேசமாகிய பரலோகத்திற்குள் நாம் செல்லுவோம்.

இப்போது முதலாம் அதிகாரம் 18-32 வசனங்களைப் பார்க்கும் போது பவுல் புறஜாதியாரின் அல்லது கிரேக்கரின் பாவத்தை காண்பிக்கிறார். அதாவது மெய்யான தேவனை ஏற்றுக்கொள்ளாத மக்களாக அவர்கள் காணப்பட்டனர். இன்னொரு விதமாக வேதம் சொல்கிறது: சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைத்திருக்கிறார்கள் (1:18). அதனால் இவர்களுக்கு நியாயத்தீர்ப்பு உண்டு என்கிறார்.

நியாயத்தீர்ப்பு கொடுக்கப்பட இருக்கிறது என்பதால் இவர்களுக்கு சத்தியத்தை அறியத்தக்கவிதத்தில் ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஏனெனில் அவர்கள் அறியாதிருந்தால் எப்படி நியாயத்தீர்ப்பு கொடுப்பது. எப்படி இவர்களுக்குரிய தேவனைக் குறித்த அறிவு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதை வசனங்கள் 19, 20 இல் காணலாம்.

"தேவனைக் குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே உலகமுண்டானது முதற்கொண்டு தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச் சொல்ல இடமில்லை".

இதனாலேயே கிரேக்கர் அல்லது புறஜாதியார் மீது தேவ கோபம் வெளிப்படுத்தப்படுகின்றது.

தொடரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படித்ததில் சில...

இயேசு மிகவும் அற்புதமான மருத்துவர். நம்மை உருவாக்கிய அவருக்கு நம்மை எப்படி குணப்படுத்துவது என்பதும் தெரியும். அவர் ஒரு சிறந்த மருத்துவர், அவர் ஒருவரால் மட்டுமே ஆத்துமா, சரீரம், மற்றும் ஆவி ஆகியவற்றைக் குணப்படுத்த முடியும். அவரைச் சந்திப்பதற்கு அவருடைய நாட்காட்டியில் இடம் இல்லாமல் போனதே இல்லை. அவருடைய பட்டியல் ஒருபோதும் பிஸியாக இருந்ததில்லை...... அவருடைய நோயறிதல் மிகவும் துல்லியமானது.. அவரது சிகிச்சை மென்மையானது... அவர் கொடுக்கும் ரிசல்ட் (முடிவுகள்) மிகவும் அற்புதமானது.

பிரியமானவர்களே, இயேசுவால் குணப்படுத்த முடியாத மற்றும் சரி செய்ய முடியாதது ஒன்றுமே இல்லை. தேவனின் வல்லமையால் முடியாத காரியம் ஒன்றுமே இல்லை. ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

**எரேமியா 33:6 இதோ, நான் அவர்களுக்குச் (உங்களுக்குச்) சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களைக் (உங்களைக்) குணமாக்கி, அவர்களுக்குப் பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன்.**

தாவீதினிடம் அவருடைய தகப்பன் அதிக மதிப்பைக் காணவில்லை. சாமுவேல் தீர்க்கதரிசியை காண்பதற்காக இருக்கும் அவனுடைய சகோதரர்கள் வரிசையில் கூட அவர் தாவீதை சேர்க்கவில்லை. அவருடைய பரலோகத் தகப்பன் அவரை வருங்கால மகத்துவத்திற்காக ஏற்கனவே தெரிந்து கொண்டிருந்ததால், அவருடைய பூமிக்குரிய தகப்பனின் நிராகரிப்பு அவருக்கு ஒரு பொருட்டல்ல. இந்த வருங்கால சங்கீதங்களின் மன்னனுக்கு, மன்னருக்கான பயிற்சி முகாம் தனது ஆடுகளுடன் வயலில் தனியாக நடந்தது என்பது தேவனைத்தவிர வேறு யாருக்கும் தெரியாது. தேவன் உங்களைத் தெரிந்து கொண்டால், உங்களை யார் நிராகரித்தாலும் (அல்லது) புறக்கணித்தாலும் வருத்தப்படாதீர்கள். தேவனின் கிருபை எல்லாவித எதிர்ப்பையும் விட மேலானது. நீங்கள் ஒரு வெற்றியாளர் என்பதை மறந்துவிடாதீர்கள்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப் பாராக. **சங்கீதம் 94:14 கர்த்தர் தம்முடைய ஜனத்தை நெகிழவிடாமலும், தம்முடைய சுதந்தரத்தைக் கைவிடாமலும் இருப்பார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிரிக்கெட் மட்டை ஏன் கிடைக்கவில்லை?

**வேதப்பகுதி: உபாகமம் 28:1-11**

ஜேம்சுக்கு அவனுடைய அப்பா சனிக்கிழமை ஒரு கிரிக்கெட் மட்டை வாங்கித் தருவதாகச் சொல்லியிருந்தார். சனிக்கிழமை கிரிக்கெட் மட்டைக்காக ஜேம்ஸ் ஆவலோடு காத்திருந்தான். ஆனால் கடைத் தெருவிற்கு போய் வந்த அப்பா கிரிக்கெட் மட்டை வாங்கித் தரவில்லை.

ஏன் நீங்கள் சொன்னபடி எனக்கு கிரிக்கெட் மட்டை வாங்கித்தரவில்லை என்று ஜேம்ஸ் கேட்டான். நீ அதிக நேரம் டி.வி பார்க்கக்கூடாது, பாடங்களை நன்றாக படிக்க வேண்டும், தினமும் பைபிள் படிக்க வேண்டும், காலையில் சரியான நேரத்திற்கு எழும்ப வேண்டும். அப்பொழுது உனக்கு கிரிக்கெட் மட்டை வாங்கித்தருவேன் என்று பிராமிஸ் பண்ணினேன். நீ அப்படி-யெல்லாம் செய்யவில்லை. எனவே கிரிக்கெட் மட்டை வாங்கித்தரவில்லை என்றார் அப்பா.

ஜேம்ஸ் தன் தவறை உணர்ந்தான். தேவன் நமக்குத் தந்தை. நாம் அவருடைய வார்த்தை-களுக்கு கீழ்ப்படிந்தால் தான் ஜெபத்தில் கேட்கும் நன்மைகளைத் தருவார்.

**சிந்தனைக்கு:-**

நாம் ஜெபம் செய்தாலும், தேவனுக்கு கீழ்ப்படிந்து வாழ்ந்தால்தான் நன்மைகள் கிடைக்கும்.

நன்றி: 'சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள் – டிசம்பர் 20

# அனல் சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / ZION CHURCH என எழுதப்பட வேண்டும்)

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)

Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 660.00 |
| இந்தியா (India) | 1200.00 |
| கனடா. அமெரிக்கா (Canada & USA) | 1400.00 |
| சிங்கப்பூர். மலேசியா (Singapore & Malaysia) | 1200.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 1500.00 |
| ஜேர்மனி. இங்கிலாந்து. இத்தாலி. அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 1500.00 |

*சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.*

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:......................................................

முகவரி:....................................................

..................................................................

..................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவன் தந்த வைரங்கள்...!

பாவத்தில் இருந்து விடுதலை
பெற்றவர்களுக்கு
உலகத்தின் வாழ்க்கை
முறையைவிட உயர்ந்த
வாழ்க்கை முறை தேவை

தேவன் எமது
பராமரிப்பாளராக
இருப்பதனால் சகலமும்
நன்மைக்கு ஏதுவாக
நடைபெறுகிறது.

முழு வாழ்க்கையின்
நம்பிக்கை அற்றுப்
போனாலும் நாம்
மகிழ்ச்சியாய் இருப்பதும்
உண்மையான
சந்தோஷமாக வாழ்வதும்
எமது விசுவாசத்திலேயே
தங்கியுள்ளது

சத்தியங்கள் எல்லாம்
அனுபவங்களாகலாம்.
ஆனால் அனுபவங்கள்
எல்லாம் சத்தியங்கள் அல்ல.

தவறு செய்தது நாங்கள்;
கிரயம் கொடுத்தது இயேசு
கிறிஸ்து!. காரணம்: உறவை
ஏற்படுத்த; கிறிஸ்தவ
சமுகத்தில் உறவுகளெனும்
போது அது கிரயத்துடன்
சம்மந்தப்பட்டது.

-VM-

அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org